This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# நிறமற்ற வானவில்

## முதல் அத்தியாயத்துக்கு முன்

"சஞ்சலா?"

"ஊஹும்..."

"சந்திரகாந்தா?"

"ஊஹும்..."

கிருஷ்ணமூர்த்தி அந்தப் புத்தகத்தின் மற்ற பக்கங்களைப் புரட்டி, "அ...திஸ் இஸ் ஸூப்பர், புல் புல்?"

"சே!" என்றாள் கல்யாணி, "எப்படித்தான் இந்த மாதிரி பெயர் எல்லாம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதோ..."

"பின் நீயே சொல்லு..."

"ஆண்டாள்ங்கிற பேருக்கு என்ன குறைவாம்?"

"இந்தப் பேர் கொடுத்ததற்காக இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நம்மை நம் பெண் சபிப்பாள்."

"இப்ப பழைய பெயர்கள் எல்லாம் மறுபடி ஃபாஷன்."

"இருக்கலாம். ஆனால், ஆண்டாள் என்கிற பெயருக்கு விமோசனமே கிடையாது. என் பெண் ஆண்டாள் என்கிற பெயரில் பள்ளிக்கூடம் போகக்கூடாது. எங்கப்பாவுக்குத் திருப்பாவை பிடிக்கும் என்பதற்காக இவ வாழ்க்கைல எதுக்கு ஸஃபர் பண்ணனும்..."

"வித்யா?"

"நோ! கையில் வீணை, வெள்ளைப் புடவை ஞாபகம் வருகிறது."

"ரத்னஜ்யோதி..."

"கிளப் டான்ஸ் ஆடுகிற குட்டி நடிகை பெயர் மாதிரி இருக்கு."

"தரங்கிணி—மணி அடிக்கிறாற்போல ஓசை கேக்கலையா?"

"இல்லை."

"பைரவி..."